

# துயரக் கொழுந்துகள்

கவிஞர்
மடவளை கலீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரக் கொழுந்துகள்

(கவிதைத் தொகுதி)

கவிஞர் மடவளை கலீல்

அன்பளிப்பு

12/6/1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THUYARAK KOLUNDUGAL
(Collection of Tamil Poems)

by

POET MADAWALA KALEEL

Copy Right Reserved

First Edition: January 1992

Printed at:
Royal Prints,
42, Beira Road,
Colombo-12.

Cover Art by:
"Thajul Uloom"
Kalaivadhi Kaleel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Price: Rs. 15/-

இது

என்னருந்

தந்தை

மர்ஹூம் யாக்கு கம்ம

ஹேலா கெதர

மீஸ்கின் ஜவாஹிர்

அவர்களுக்கு



சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலிகள்


கன்னி முயற்சிக்கு வாழ்த்துக்கள்
முயற்சி வாழ்க
எழுத்துக்கு எனது வாழ்த்துக்கள்
ஒரு நூறு பூக்கள் மலரட்டுமே
பா வல்லான் ஆக வாழ்த்து
ஒரு காவியமான கன்னி முயற்சி
மலையகத்தின் தென்றலே வாழ்க
இலக்கியத் தெருவில் ஒரு விபத்து


## விளைச்சல்கள்


தாம் ஒருவர் ... ... ... 17
இன்ப நாள் இனி வருமா ... ... 18
மயக்க வரும் மாலை ... ... 19
சந்திப்புகள் ... ... ... 20
அன்பு நீ எனக்கு தா ... ... 21
காத்திருப்பேன் உனக்காக ... ... 22
சீதனத்தை ஒழிப்போம் ... ... 23
மயக்க வரும் மாது ... ... 24
மனையாள் மாறலாமா? ... ... 25
மழலை மொழி கேட்கலாமா? ... ... 26
சோக மழை ... ... ... 27
பட்டினி மலர்கள் ... ... 28
அன்பே நீ வருவாயா? ... ... 29
செல்வம் சேருமா? ... ... 30
உயரிய வாழ்வு ... ... ... 31
அன்புக்கு ஓர் அன்னை ... ... 32
வாழ்வில் வரவேண்டும் ஒற்றுமை ... ... 33
அமைதி வரும் ... ... ... 34
ஆசைகள் ... ... ... 35
தவறு ... ... ... 36
சூதாட்டம் ... ... ... 37
கல்வியின் சிறப்பு ... ... 38
மலையோரக் காற்று ... ... 39
துயரக் கொழுந்துகள் ... ... 40
ஏன் இந்த சீற்றம் ... ... 41
இறைவன் செயல் ... ... 42



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னி முயற்சிக்கு வாழ்த்துக்கள்

மடவளை கவீஸ் என்பார் வளர்ந்து வரும் ஓர் இளம் கவிஞர் என்று அறிகிறேன். அண்மையில் இலக்கியப் பிரவேசம் செய்தாலும் இவரது கவிதைகள் தொடர்ச்சியாக ''தினகரன் வார மஞ்சரி'' யில் வந்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. வானொலியிலும் சிற்சில கவிதைகள் ஒலிபரப்பாகியிருக்கின்றன என்பதையும் அறிய முடிகிறது. இந்த நாட்டில் ஒரு புதிய கவிஞன் உருவாவது எனக்கு மகிழ்ச்சியே. அதிலும் கவீஸ் ஒரு முஸ்லிம் என்பதால் இரட்டிப்பு மகிழ்ச்சி எனக்கு. முஸ்லிம் கலைஞர் எழுத்தாளர்கள் தமிழுக்காற்றிய தொண்டு நாடறிந்ததே. தமிழ் கூறும் நல்லுலகெங்கும் இதன் தாக்கம் பிரதிபலித்திருப்பதை அவதானிக்கலாம்.

எமது முஸ்லிம் எழுத்தாளர்களைப் பொறுத்த அளவில் கிட்டத்தட்ட எல்லாருமே கவிதைகளிலே கை வைக்கிறார்கள். இலக்கியத்தின் ஏனைய பிரிவுகளை விட்டுவிடுகிறார்கள். இது கவலையளிக்கக்கூடிய ஒன்று. கவிதைப் பிரவேசம் மிக இலகுவானதென்று கருதிக்கொள்கிறார்கள் போலும். சிறுகதை, உருவகக் கதை, நாவல், விமர்சனம், ஆய்வுகள் போன்றவற்றில் இன்றைய இளைய தலைமுறை எழுத்தாளர்கள் கால்பதிக்க வேண்டும் என்பது எனது வேணவா!

''கவிதை எழுதுவதுதான் இலகுவானது'' என்று கருதிக் கால் வைக்கும் எழுத்தாளர்கள் அனைவரும் கவிதைத் துறையில் வெற்றி பெற்றுவிடுவதில்லை. இது கண்கூடு. சிலர் இருந்த இடம் தெரியாமலே மறைந்து விடுகிறார்கள். மடவளைக் கவீஸைப் பொறுத்த அளவில் அரும்பத்துடிக்கும் ஆரம்பக் கவிஞர் என்றே இவரைக் கருத வேண்டும். ஆனால் இவர் உடனடியாகவே ஒரு நூலை வெளியிட முயல்வது இவரது துணிச்சலைக் காட்டுகிறது.

இவரது கவிதைகளைப் பார்த்தேன். சிறிய சிறிய சொற்களைக் கொண்டு அதற்கு வார்த்தை வடிவம் கொடுத்துக் கவிதைகளை நகர்த்திச்செல்லுகிறார். சமூகத்தில் அன்றாடம் நிகழும் சாதாரண சம்பவங்களையே கவிதையின் கருவாகக் கையாளுகிறார். தனக்கென்று ஒரு தனிப்பட்ட நடையையும் உத்தியையும் வைத்திருக்கிறார்.

இன்னும் நிறைய விடயங்களை இவர் தேட வேண்டும். சமூகத்தின் பல்வேறு திக்குகளையும் அலச வேண்டும். கவிதையின் நோக்கையும், போக்கையும் சற்று மாற்றிக்கொள்ள வேண்டும். இவரது கன்னி முயற்சி வெற்றி பெற மனமான வாழ்த்துக்களை நலமாகச் சொரிகிறேன்.

அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர், பா. உ.
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி வாழ்க

தமிழ்க் கவிதைத்துறை, அது மரபோ - புதிதோ - வசனமோ - உரைப்பாவோ எதுவானாலும், அத்துறை மேலமேலும் வளர்ச்சி பெறுவது தமிழுக்கு செழுமை தரும். அதன் வழியில் பேனா பிடிக்கும் தமிழ் இலக்கியவாதிகளை தட்டிக் கொடுத்து, உற்சாகமளிப்பது ஒரு வகையில் தமிழுக்கு செய்யும் பணியாகும்.

இந்த கோணத்தில், மத்திய மலையகத்தின் முஸ்லிம் கிராமமான மடவளையைச் சேர்ந்த அன்பர் கலீல், அண்மைக் காலமாக பத்திரிகை வானொலி முதலியவற்றில் எழுதி வருகின்றார். அவற்றுள் சில நூலுரு பெற்று, ''துயரக் கொழுந்துகள்'' என்னும் நாமத்தில் வெளிவருகின்றன என்று அறிகிறேன். மகிழ்கிறேன்.

அன்பர் கலீல் தாம் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் என்று தொலைபேசியில் கூறினார். காக்கிச் சட்டைக்குள்ளிருந்து கவியுள்ளம் ஒன்று தலை நீட்டினால், அதைத் தட்டிக் கொடுக்க வேண்டுமே தவிர, தட்டிக் கொட்டி விடக்கூடாது என்று நினைப்பவன் நான்.

அன்பர் கலீலின் ஆக்கங்களின் குணநலன்களை காலம் தீர்மானிச் சட்டும். அவருடைய முயற்சி வாழ்க வென வாழ்த்துவோமாக!

எஸ். டி. சிவநாயகம்
பிரதம ஆசிரியர்
17-12-1991 தினபதி - சிந்தாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துக்கு எனது வாழ்த்துக்கள்

மனதிலே தோன்றும் உணர்வுகளுக்கு அல்லது நினைவுகளுக்கு கவிதை என்ற உணர்வோடு வடிவம் கொடுக்க முனைந்துள்ள மடவளை கலீல் தன்னை சூழவுள்ள சமூகத்தைப் பற்றியும், மனிதர்களைப் பற்றியும் அவர்தம் நடத்தைகளைப் பற்றியும் சிந்திக்கின்றார்.

பத்திரிகைகளிலும், வானொலியிலும் அவ்வப்பொழுது அச்சிடப் பட்டும், ஒலிபரப்பப்பட்டும் வந்தவை இக்கவிதைகள். இக்கவிதை களினூடே கலீல் மானுடத்தை நேசிக்கும் ஒருவராகத் தம்மை இனங் காட்டி கொள்கின்றார்.

இவரது பாடல்களை வாசிக்கும்போது திரை இசைப்பாடல்களை ஆழ்ந்து அனுபவித்த உணர்வின் சாயல் தெரிகின்றது. குறிப்பாக ஆசைகள் என்ற கவிதையைப் பார்க்கும்போது திரை இசை அருட்டுணர் வின் தாக்கத்தை உணர்ந்துகொள்ள முடிகிறது. தவறுகள் என்ற பாடலும் இதே தொனியையே ஏற்படுத்துகின்றது.

இந்தச் சிறு தொகுதியில் அமைந்துள்ள பாடல்கள் எல்லாம் ஒரு வகையில் சிந்திக்கத்துடிக்கும் மனித மனத்தின் ஏக்கத்தையும், தாபத் தையும் காட்டுகின்றன. மடவளை கலீலின் பாடல்கள் எல்லாம் வரிக் கவிதைகள் அல்லது எண்ணச் சிதறல்களாக அமைந்துள்ளன என்பதே எனது அபிப்பிராயம்.

காதல், இயற்கை, அழகு, சமூகக் குறைகள், சிறுமைகள் என்ற வரிசையில் தமது உணர்வுகளைச் 'சீண்டிய' விடயங்களை எல்லாம் கலீல் தமது கவிதைகளுக்குப் பொருளாக எடுத்துள்ளார் இந்த ஆக்கங் களில் எல்லாம் ஓர் இளம் உள்ளத்தின் நினைவுகளை காண்கிறோம்.

மடவளை கலீல் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர். அவரது தொழி லுக்குப் புறம்பான மென்மையும், குழைவும் அவரது பேச்சில் எப் பொழுதுமே இழையோடும். சிந்திக்கத் துடிக்கும் மனமும், பீறிட்டுப் பாயும் உணர்வுகளை அடக்கமுடியாத மனமும் மனப்பதிவுகளை ஒழுங் காக வெளிப்படுத்தும்போது அவை கவிதைகளாக மலரும்.

கலீல் எழுதியவை வரிக்கவிதைகளா, புதுக்கவிதைகளா என்ற தேடல் ஒருபுறம் இருக்கட்டும், இவர் சிந்திக்கத் தெரிந்தவர். நெஞ்சில் உணர்வு இருக்கிறது. எனவே எழுதியுள்ளார். இவரது எழுத்துக்கு எனது வாழ்த்துக்கள்.

இல. 24, லில்லி அவெனியு,
வெள்ளவத்தை,
கொழும்பு-6,

ஆ. சிவநேசச்செல்வன்
பிரதம ஆசிரியர்
வீரகேசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நூறு பூக்கள் மலரட்டுமே

கவிஞர் மடவளை கலீல் ஒரு பொலிஸ்காரர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அரசுக்கு உதவும் ஓர் ஊழியர். முதன் முதலாக ஒரு சிறு கவிதையுடன் 'தினகரன்' அலுவலகத்திற்கு வந்தார். என்னைச் சந்தித்துப் பேசினார். கவிதை எழுதுவதில் அவருக்கு நிறைந்த ஆர்வமிருப்பதனைக் கண்டேன். அவருக்கு உற்சாகமளிக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு எழுந்தது. அவரது கவிதையில் யாப்பு, அணி, இலக்கணம் இருக்கின்றனவா என்று நான் கவலைப்படவில்லை. ''வல்லவனாக்கிய சித்திரம் போன்றது வண்மைக் கவிஞர் கனவு'' என்பர். உள்ளத்தெழுந்த உணர்வுகளையெல்லாம் சொல்லில் வடிக்கும் ஓர் எழுத்தோவியனாகவே அவரைப் பார்த்தேன். கலீல் திருமணஞ் செய்து பலமாதங்களாகி இருக்காது என்பதனை அவரது கவிதைகளே கூறின. காதலைப் பற்றிப் பாடினார்; அழகு நங்கையின் அரும் குணங்களைப் பாடினார். காதல் கைகூடியதும் மழலைச் செல்வம் பற்றியும் பாடினார் போலும்!

மெய்ப்பாட்டினையும் சொந்த அனுபவத்தினையும் இயல்பாகவே சொற்களினால் அழகுறத் தீட்டுபவனே இயற்கைக் கவிஞன். கலீலின் கவிதையிலே செயற்கை வாசனையை நான் காணவில்லை.

''ஒரு நூறு பூக்கள் மலரட்டுமே'' என்ற பரந்த உளப்பாங்குடன் கவிதைகளை ஏற்றேன். எங்கள் தினகரனில் எழுதியபின் வேறு இடங்களிலும் இவரது கவிதைகளை வரவேற்றார்கள். எனது நம்பிக்கை வீணபோகவில்லை என்பதனை உணர்ந்தேன். இப்போது கவிதை நூலும் வெளியாகின்றது. எனது பாராட்டுக்கள் அவருக்கு உரித்து. மெய்ப்பாட்டுக்கே கவிதைகள் முக்கிய இடமளிப்பினும் கலீலின் கவிதைகள் கணீர் என்று இருக்கும். காதல் பித்து காலமெலாம் நீடிக்காது. பிற துறைகளையும் கலீல் நாடுவாரென்றே நம்புகிறேன். இவரது கவிதைகளுக்கு உந்து சக்தியாகவிருப்பவர் இவரது காதல் மனையாளே எனபது சொல்லி அறிந்து கொள்ள வேண்டியதில்லை. சிற்றின்ப எல்லையைக் கடந்து செல்வாராயின் கலீலின் கவிதைகள் பயனுள்ளவையாக இருக்கும் என்பது எனது கருத்து.

வளர்க கலீலின் கவிதா வளம் என வாழ்த்துகின்றேன்.

ஆர். சிவகுருநாதன் M. A. (சட்டத்தரணி)
பிரதம ஆசிரியர் – தினகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா வல்லான் ஆக வாழ்த்து!

மடவளை கலீல் என்கின்ற
வாலிபர் ஒரு நாள் மாலை
திடுமென வீடு வந்தார்;
திருமுகம் ஒன்று தந்தார்;
மடலில் என் நண்பர் தந்த
மதிப்புரைச் செய்தி கண்டேன்;
உடன் கையில் கொண்டு வந்த
உரைக் கவி சிலவும் தந்தார்;

x–x–x–x

வாசித்துப் பார்த்தேன்; என் ''பா
வளம்'' எனும் நிகழ்ச்சிக்குள்ளே
யோசித்துச் சிலவைச் சேர்த்தேன்;
யூகமாய்ப் பிறகும் அன்னார்
ஆசித்தவாறு வேறும்
அன்பர்க்கும் சொல்லி வைத்தேன்;
நேசிக்கத் தூண்டும் பாடல்
நிறையவே பிறகும் செய்தார்!

x–x–x–x

மனதுக்குப் பிடித்த அன்னார்
மழலைப் பாத் தொகுதி கூட
எனதரும் ஆசியோடே
இருந்திடல் வேண்டும் என்றார்;
கனதியாய்க் கருத்தினோடே
கவி நலம் செறிந்து மேலும்
பனுவல்கள் கலீல் படைத்துப்
பா வல்லானாக வாழ்த்து!

— சில்லையூர் செல்வராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு காவியமான கன்னி முயற்சி

கவிதையானது படைப்பாளியின் இதய ராகத்தின் பின்னிசைத் தொகுப்பு. உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடுவதில் கவிஞன் பிற எழுத்தாளர்களின் பட்டியலில்தான் இருக்கிறான். வித்தியாசம், வெளியிடும் பாங்கு; ஒருவர் வசன நடை, மற்றவர் இசை நடை.

இங்கே, கவிஞர் மடவளை கலீல், மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளைப் பவ்வியமாய்த் தொட்டு கொஞ்சும் தமிழில் குழல் இசை பொழிகிறார். இவற்றுள் பட்டினி மலர்கள், மலையோரக் காற்று, துயரக் கொழுந்துகள், உயரிய வாழ்வு, அன்புக்கு ஓர் அன்னை, ஏன் இந்தச் சீற்றம்? என்பன எம் கவனத்தை ஈர்த்த சில கவிதைகள்.

'உயர்வான செயல்கள் தோன்ற உன்னதமான எண்ணங்கள் தேவை' என்கிற கவிஞனின் கணிப்பு, முத்தான முத்தாய்ப்பு. ''வாட்டிடும் வறுமை - வருத்திடும் துயரம் - தொல்லையான வாழ்வுக்கு இல்லையா ஒரு விடிவு'' என்கிற ஏக்கம், எளியோரின் இதயச் சுவர்களை மோதிடும் எண்ண எதிரொலி!

மொத்தத்தில், இக்கவிஞனின் ஆக்கங்களில் நிதர்சனத் தன்மை நித்திலமாய் விரவி நிற்பது உணரக் கூடியதாய் இருக்கிறது.

இவரது முயற்சியைப் பாராட்டுகிறேன் - அவரது பிரகாசமான எதிர்காலத்துக்கு நல்வாழ்த்துக் கூறுகிறேன்.

அஷ்ரப் அஸீஸ்
பணிப்பாளர் நாயகம்
'அஸீஸ் மன்றம்'

நிர். 17, புதிய சோனகத் தெரு,
கொழும்பு 12.
16-12-1991.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் தென்றலே வாழ்க!

மனித சமுதாயத்தின் வாழ்வியல் கோணங்களின் மொழி பெயர்ப்பே இலக்கியமாகும். மனித வாழ்வு நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம், சூழ்நிலைக்கு சூழ்நிலை மாறுபட்டிருக்கலாம். அவ்வாறே மொழியும் கூட வேறுபட்டிருக்கலாம். எது எப்படி இருப்பினும், அந்தந்த இடத்திற்குரிய வாழ்வியல் நிகழ்வுகளை, அந்தந்த இடத்திற்குரிய மொழிகளில் தருவதே, காலத்தைப் பிரதிபலிக்கும் மக்கள் இலக்கியமாகும்.

இலக்கியம் என்பது, அது தோன்றுகின்ற காலத்தைப் பிரதிபலிக்கா விட்டால், அது பிறக்கின்ற காலத்தில் வாழும் மக்களின் கதைகளை பேசாவிட்டால், அஃது மக்கள் இலக்கியமாகாது. மக்களின் கதைகளை கூறும் இலக்கியங்களையே, காலம் கண்ணியப்படுத்தும்; புதையலாகத் தன்னுள் பூட்டிவைத்துக் கொள்ளும், காலத்தைக் காட்டாத, அக் காலத்தில் வாழ்ந்த மனிதர்களைத் தொட்டுப் பார்க்காத மற்றைய இலக்கியங்களை, காலம் காணாமலாக்கிவிடும். அத்தகைய இலக்கியங் களைப் படைத்த இலக்கியவாதிகள், தாங்களே தங்களது முக வரிகளைத் தொலைத்துவிட்டு, தம் விலாசங்களுக்கு விளம்பரம் தேடுவரர்கள்.

இந்தப் பொதுப்படையான உரைகல்லில் தமிழிலக்கிய வரலாற்றைச் சற்றே உரசிப் பார்த்தால், சங்ககால இலக்கியங்கள், அக்காலத் தமிழர் களின் வாழ்வியற் பண்புகளை வகை வகையாக வார்த்தை வரிகளில் வடித்துத்தருவதை உய்த்துணரலாம். இவ்வாறே சங்கம் மருவியகாலம், பல்லவர் காலம், நாயக்கர் காலம், சோழர் காவம் என்று தமிழிலக்கிய வரலாற்றைப் பிரித்தாய்ந்தால், அவ்வக்காலங்களில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள், அவ்வக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியற் பண்பு களை – அவை கனிந்த காதலாக இருக்கட்டும்; விளைந்த வீரமாக இருக்கட்டும் எதுவாயினும், அவற்றை காலமெலாம் கதை கதையாகச் சொல்லிச் செல்லும் 'தூது இலக்கியங்'களாகவே இருந்து வருகின்றன. இதனாலேயே காலத்தின் கணக்குகளை இலக்கியங்களாகக் கணித்து (குறித்து) வைக்கின்ற இலக்கியவாதிகளை – படைப்பாளிகளை – எழுத்தாளர்களை "காலத்தின் தூதுவர்கள்" என்று உலகம் உச்சிமீது வைத்து மெச்சுகின்றது.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் நாம் தொட்டுப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு காலத்தில் தோன்றிய இலக்கியங்களும் அவ்வக் காலத்திய வாழ்வியல்களை வடித்துரைக்க பொருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான வடிவங்களை இலக்கியத் துறையில் கையாண்டே வந்திருக்கின்றன என்பதை தமிழிலக்கிய சரிதை சாட்சியங்களோடு காட்சிக்கு முன்வைக்கின்றது இதனாலேயே விருத்தப்பாக்கள் ஒரு காலத்தில் கையாளப்பட்டன என்றால், வெண்பாக்கள் பிறிதொரு காலத்தில் பேணப்பட்டு வந்திருக்கின்றன. இந்த வடிவங்களின் வித்தியாசங்களை உத்தேச காலத்தின் ரசனை உணர்வுகளும், பாடு பொருட்களுமே தீர்மானித்துள்ளன.

மேனாட்டாரின் வருகையால் தமிழிலக்கியத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டு, நாவல் - சிறுகதை - விமர்சனம் என்று புத்திலக்கியங்கள் தோன்றலாயின. தமிழ்க் கவிதைத் துறையை எடுத்துக்கொண்டால், அது, இருபதாம் நூற்றாண்டில் பாரிய மாற்றத்திற்கும் – மறுமலர்ச்சிக்கும் ஆளாகி, மக்கள் சொத்தாக இதயாட்சி பீடம் ஏறி அரசோச்சி வருவதை அவதானிக்கலாம். இந்த கவிதா ஆட்சிக்குரிய ராஜபாட்டையைத் திறந்துவிட்ட பெருமை, எட்டயப்புரத்து முண்டாசு கட்டிய முறுக்கு மீசை கவிஞன் சுப்ரமணிய பாரதியையே சேரும். அதனாலன்றோ, ''பாட்டுக்கொரு புலவன் பாரதி'' என்னும் பட்டம் பாரோரால் வழங்கப்படலாயிற்று.

பண்டிதர்களின் அந்தப்புரத்துச் சொத்தாக அலங்கரிக்கப்பட்டு வந்த தமிழ்ப் பாட்டை, நாட்டுக்குள் – நற்றமிழர் தம் வீட்டுக்குள் கொண்டுவந்தான் பாரதி. எளிய தமிழில், இலகு நடையில் இலக்கியம் செய்தான். சமுதாயத்தின் கடைசி வரிசை உறுப்பினரும் தமிழ்ப் பாட்டைக் கேட்டு கிறுகிறுக்கும் கிறக்கத்தை கிளர்ந்தெழச் செய்தான் பாட்டுத்திறத்தாலே வையத்தைப் பாலித்தான். அதன் விளைவு என்ன?.

தமிழ்கூறும் நல்லுலகெங்கும் ஆயிரமாயிரம் கவிதா குயில்கள் கவி பாடலாயின. புரட்சிக் கவிஞன் பாரதியைத் தொடர்ந்து, பாரதிதாசன் சுத்தானந்த பாரதியார், கவிஞர் சுரதா, நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை என்று ஒரு பாட்டுப் பட்டாளமே படை எடுக்க ஆரம்பித்தது. சுதந்திரத்திற்குப் பின் நாமெல்லாரும் அறியும் விதமாக, இந்தப் பாட்டுப் பட்டாளத்தின் கவிஞர்களாக மருதகாசி, தஞ்சை ராமையாதாஸ், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கவிமணி கா. மு. ஷெரீப், புலமைப்பித்தன். புலவர் ஆப்தீன், கவியரசு கண்ணதாசன், கவிஞர் வாலி போன்ற பலரைத் தொட்டுரைக்கலாம்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்..." தமிழிலக்கியத்தில் நிலவி வரும் ஒரு மரபு. இதனை அடியொட்டி கவிஞர் கண்ணதாசனுக்குப் பின் பல புதிய கவிஞர்கள் முகம் காட்டினர். சமுதாயச் சீரழிவுகளும் – கொடுமைகளும் இயல்பாக சிந்திக்கவும், சுதந்திரமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்புனையவும் வழிவகுத்தன. இதனால் சீர், தளை, அசை போன்ற விதிகள் மீறப்பட்டு, 'புதியதோர் விதி சமைப்போம்' என வீறு கொண் டெழுந்தது ஒரு புதிய தலைமுறை.

இந்தத் தலைமுறை எழுச்சி தமிழுக்குப் புதியதல்ல. பழையன கழிந்து ஒரு புதிது புகுந்திருக்கிறது அவ்வளவுதான். இந்தத் திருக் கூட்டத்தின் சமீப காலத்திய அங்கத்தவர் தான், இப்போது "துயரக் கொழுந்துகள்" என்னும் இந்த கவிதைத் தொகுப்பை நம் கரங்களில் தவழ விட்டிருக்கும் கவிஞர் மடவளை கலீல்.

இவர் – சமுதாயத்தின் இருண்ட பக்கங்கள் மீது சட்டத்தின் வெளிச்சத்தைப் பாய்ச்சும் ஓர் உத்தியோகத்தர். இவருக்கு சமுதாய இதயங்களுடன் இரகசியமாகவும் – பரகசியமாகவும் ஓட்டுதலும், உறவு முண்டு. இந்த உறவின் நெருக்கத்தில் அவர் காணும் அல்லது சம்பந்தப் படும் சம்பவங்களின் சாற்றினை எழுத்தில் வடிக்கின்றார். இந்த வடிவத் திற்கு என்ன பெயர் தரலாம் என்பது வாசிப்பவர் மனநிலையைப் பொறுத்தது.

எனினும் – எழுதும் ஆர்வம், சமுதாயத்தால் பாதிப்புறும் மன நெருடல் – அவற்றை பதிவு செய்யும் வாய்ப்பு இவரை எழுதத் தூண்டு கின்றன. இவரை நெறிப்படுத்துவது இலக்கிய குடும்பத்தின் மூத்தவர் கள் எனச் சொல்லப்படும் முன்வரிசை அங்கத்தவர்களின் முன்னுள்ள பொறுப்பு. இந்தப் பொறுப்பைச் சரிவர நிறைவேற்றாமல் ஒரு தெரு வோரத்து பாதசாரியாக விமர்சிப்பது பண்பல்ல. ஏனென்றால், ஒரு அறிவுலக ஜாம்பவான் "எழுதும் ஆற்றலும் வாய்ப்பும் மிக்க ஒருவர் எழுதாதுபோனால், அது ஒரு சமுதாயத்தை கொலை செய்வதற்கு சமன்" எனக் கூறியுள்ளார். எனவே–இலக்கிய உலகம் ஒரு கொலைக்கு "ஐ விட்னஷ்"ஷாக ஆகாமல், ஒரு பொறுப்பை சுமந்து பொற்காலம் படைப்போம் வாருங்கள்.

அதன் முதல் முயற்சியாக மலையகத்தின் தென்றலே – மடவளை கலீலே வாழ்க என வாழ்த்துவோம்; வாருங்கள்.

'கதிபுல் ஹுக்' எஸ். ஐ. நாகூர் கனி

இல. 42, பேரா வீதி,
கொழும்பு-12.
24-1-1992.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத் தெருவில் ஒரு விபத்து...

விபத்துக்கள் எல்லமே சோகமானதல்ல.

நான் கவித்துறையில் வந்து விழுந்ததும் விபத்துத் தான்.

என் மனதைப் பாதித்த விஷயங்களை அலங்கார சொற்களால் சொன்னபோது "அட ... கவிதை நன்றாக இருக்கின்றதே..." என்று என் எண்ணங்களின் எழுத்துருவ வெளிப்பாட்டை கவிதைகளாக எனக்கு அடையாளம் காட்டி, உற்சாகமூட்டிய நண்பர்கள் தான் என்னை இலக்கிய உலகத்துக்கு அனுப்பிவைத்தவர்கள்.

இதில் 'தினகரன்' பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன் M. A. (சட்டத்தரணி) அவர்களும், பிரபல நாவலாசிரியர் திரு. செ. கணேசலிங்கம் அவர்களும் முக்கிய இடம் பெறுபவர்களாவர்.

இந்த உலகத்தில் பிரவேசிக்க எனக்குள்ள தகுதியை அங்கீகரித்தவர்களே அவர்கள் தான். உள்ளே நுழைந்ததும் தான் இங்குள்ள மகுடம் தரித்த இலக்கிய கர்த்தாக்களையும், அவர்கள் படைத்து குவித்துள்ள இலக்கிய செல்வங்களையும் முழுமையாக தரிசிக்கத் தொடங்கியிருக்கின்றேன்.

தங்கள் கவிதைகளை சிம்மாசனமேற்றி அதன் சிருஷ்டிகர்த்தாக்கள் கூடி நிற்கும் அரசவையில், வழிதவறி புகுந்துவிட்ட வழிப்போக்கனைப் போல நான் திணறியபோது, தட்டிக் கொடுத்து ஆசனம் தந்தவர்களுக்கெல்லாம் இந்த நூல் சமர்ப்பணமாகட்டும்.

இதில் உள்ள கவிதைகளுக்கு இருக்கின்ற இலக்கிய அந்தஸ்தைப் பற்றி எனக்கே ஒரு சுய விமர்சனமுண்டு. ஆனால், தரமான படைப்புகளுக்கு நிகரான அந்தஸ்தை பெற வேண்டும் என்ற வேட்கையில் தான் என் எழுதுகோலை நகர்த்துகின்றேன். என் முன்னேற்றத்தில் அக்கறையுள்ள விமர்சன நண்பர்கள் என்னை இன்னும் நெறிப்படுத்துவார்கள் என நம்புகின்றேன்.

நான் இதுவரை எந்தவித இலக்கிய கூட்டங்களுக்கும் சென்றவனில்லை; எந்த இலக்கிய – கவிதை நூல்களையும் படித்தவனில்லை, ஆனால் – என் மன உணர்வுகளுக்கு நான் இங்கே எழுத்து வடிவம் கொடுத்திருக்கிறேன். இந்த என் வடிவங்களுக்கு வரவேற்பு தரவேண்டியது வாசகர் கடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஆக்கங்கள் இலக்கியத்திற்கு பெருமை சேர்க்கின்றனவோ, இல்லையோ... இந்த கவிதைத் தொகுதிக்கு பாராட்டுரையும், சிறப்புரையும், ஆசியுரையும், மதிப்புரையும், இலக்கிய சிந்தனையும் தந்துள்ள இந்நாட்டின் தமிழ்ப் பத்திரிகையுலக ஜாம்பவான் திரு. எஸ். டி. சிவநாயகம், 'தினகரன்' நாளிதழின் பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன், 'வீரகேசரி' தினசரியின் பிரதம ஆசிரியர் திரு. ஆ. சிவநேசச் செல்வன், முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்களின் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் "அஸீஸ் மன்றம்" பணிப்பாளர் நாயகம் ஜனாப் அஷ்ரப் அஸீஸ் 'பல்கலை வேந்தன்' திரு. சில்லையூர் செல்வராசன், "காதிபுல் ஹக்" (சத்திய எழுத்தாளன்) எஸ். ஐ. நாகூர் கனி ஆகியோர் என்னைப் பெருமைப் படுத்தியுள்ளனர். இவர்கள் அத்தனை பேருக்கும் என் ஆழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்கின்றேன்.

முகப்போவியம் கீறித் தந்த கலைவாதி கலீல், அழகான முறையில் அச்சிட்டுத் தந்த ரோயல் பிரிண்ட்ஸ் அச்சகத்தார் ஆகியோருக்கும், இதனை பெருமனதுடனும், உவகையுடனும் வெளியிட முன்வந்த அஸீஸ் மன்றத்திற்கும் என் மறவாமை என்றும் உண்டு.

இவர்களையெல்லாம் என் கவிதை மலர்களாலேயே அர்ச்சிக்கின்றேன்.

— கவிஞர் மடவளை கலீல்

இல. 15, சிரிமல்வத்த ரோட்,
மடவளை பஸார்.
26-12-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

"இலக்கியப் பூவின்

இன்கவிதைத் தேறல்

ஞாலமெல்லாம் வழிய

நானிறையை வேண்டுகிறேன்"

— கவிஞர் மடவளை கலீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் ஒருவர்

அரும்பு மீசை எனக்கு
அழகாக இருக்கும் என்று
ஆலோசனை சொல்ல உனக்கு
ஆசை வந்தது எதற்கு

வட்டம் இட்டுப் பறந்தது வண்டு
வண்ண மலர் சிரித்தது அதைக் கண்டு
தேன் உண்ண துடித்தது வண்டு
தெவிட்டிச்சோ என்று கேட்டது மொட்டு

நாணயம் நம்பிக்கை உள்ளவன் — நீ
நன்றாய் அலசி, ஆராய்ந்தேன் — நான்
நாடு போற்ற வாழ்த்திடுவோம்
நாம் இருவர் அல்ல — ஒருவர்

நன்றி ; 'தினகரன்' வார மஞ்சரி
17-03-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய நாள் இனி வருமா?

இரு பறவைகள் சந்தித்த
இனிய நாள் ஞாபகமா?
இன்பத்துக்கு இலக்கணம் வகுத்து
இருள் நீக்கி ஒளி தந்த நாள்

இன்பக் கடலில் நீந்தி
இருவர் ஒருவராகி
இதய வீணையின் இன்பராகம்
இசைத்த நாள்

இனிமைக் கனவுகள் நனவாகி
இன்ப நாடகம் அரங்கேறி
இரு துருவங்கள் ஒரு துருவமாகி
இளமை அழகை ரசித்த நாள்

இன்சுவை விருந்துண்ண
இருவரையும் அழைத்து
இதயக் கோவிலில்
இன்ப விளக்கேற்றிய நாள்

ஈருயிர் ஓருயிராகி
இன்ப வெள்ளத்தில் தத்தளித்து
இனிமை நமக்களித்த
இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டிய நாள்

இளமை வனப்பின் இரகசியத்தை அறிவித்த
இன்ப மாளிகைக்கு அத்திவாரம் இட்ட
இருவர் உள்ளத்திலும் இன்னலைத் தீர்த்த
இனிய நாள் இனி வருமா?

நன்றி: 'தினகரன்' வார மஞ்சரி
05-05-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயக்க வரும் மாலை

நினைப்பதெல்லாம் நடந்து
அணைத்ததெல்லாம் விருந்து
வசந்த காலக் காற்று
வீசியது நேற்று

சந்தித்தால் இன்பம்
சிந்தித்தால் துன்பம்
சந்திப்புக்குப் பின் சிந்திப்பு
சிந்திப்புக்குப் பின் சந்திப்பு

கன்று தரும் வாழை
என்று வரும் நாளை
ஏக்கம் தரும் காலை
மயக்க வரும் மாலை

நன்றி: 'தினகரன்' வார மஞ்சரி
17-03-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்புகள்

கடற்கரை ஓரத்தில்
கன்னியவள் தூரத்தில்
கை யசைக்க
கால்கள் பின்தொடர்ந்தன

கன்னியவள் திரும்பிப் பார்க்க
கண்களிரண்டும் பேசியன
கலகலப்பான சிரிப்பொலிகள்
காற்றுடன் கலந்தன

கற்பாறைகள் சந்திக்கும் இடத்தில்
கடல் அலைகள் வந்து மோதின
காதலர்கள் சந்தித்த பின்
கனிவான மொழிகள் கனிந்தன

கன்னியின் விழிகள்
கனிவான மொழிகள் பேசின
கண்கள் இரண்டும் சந்தித்தன
கைகள் இரண்டும் இணைந்தன

கன்னத்தில் ஒரு அழகான எண்ணத்தில்
காளை கொடுத்த முத்தங்கள்
கன்னியின் உள்ளத்தில்
கற்கண்டாகக் கனிந்தன

நன்றி : 'பாவளம்' – இலங்கை ஒலிபரப்புக்
கூட்டுத்தாபனம்
03-07-1991

நிகழ்ச்சி தயாரிப்பு : பல்கலை வேந்தன் – சில்லையூர் செல்வராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நீ எனக்குத் தா!

பாசம், அன்பு, கருணை
இவை மூன்றும் நானுனக்குத் தருவேன்
இனிய மொழி பேசும் வண்ணக்கிளியே!
அன்பு நீ எனக்குத்தா?

பொன், வைரம், இரத்தினம்
இவை மூன்றும் நானுனக்குத் தருவேன்
அன்பு மொழி பேசும் அன்னக்கிளியே!
அன்பு நீ எனக்குத்தா?

வீடு, காணி, நிலம்
இவை மூன்றும் நானுனக்குத் தருவேன்
புன்னகை பூக்கும் பைங்கிளியே!
அன்பு நீ எனக்குத்தா?

வாழை, பலா, மா
இவை மூன்றும் நானுனக்குத் தருவேன்
பார்த்தால் பசி தீரும் பைங்கிளியே!
அன்பு நீ எனக்குத்தா?

பூபாளம், பூமணங்கள், புதுக்கவிதை
இவை மூன்றும் நானுனக்குத் தருவேன்
இனிமை தரும் இன்பக்கிளியே!
அன்பு நீ எனக்குத்தா?

நன்றி: 'தினகரன்' வார மஞ்சரி
11-08-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்பேன் உனக்காக

காலை இன்ப நேரத்தில்
கடற்கரை ஓரத்தில்
காதோடு இன் மொழி பேச
காத்திருப்பேன் உனக்காக

கண் விழிகளில்
கண்டேன் சில மொழிகள்
கனிரச முத்தங்கள் கொடுக்க
காத்திருப்பேன் உனக்காக

கலைந்த கூந்தல்
காற்றினில் அசைவதை
கண்டு களிக்க
காத்திருப்பேன் உனக்காக

கன்னியே உன்
கட்டுடல் வீணையை
கனிவோடு மீட்டிடக்
காத்திருப்பேன் உனக்காக

கரும்பை நாடும்
கட்டெறும்பு போல்
காலமெல்லாம்
காத்திருப்பேன் உனக்காக

நன்றி : 'தினகரன்' வார மஞ்சரி
13-10-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனத்தை ஒழிப்போம்

சீதன வியாபாரத்திற்கு
சீல் வைக்க முன்வாருங்கள்
சீர்மை பொருந்திய இளைஞர்களே!
சீரான சமுதாயம் உருவாக்குவோம்

சீதனப்பாம்பு சீண்டிவிட்டது
சிலரின் வாழ்வும் சிதறிவிட்டது
சீதனத்தை ஆதரிக்கும் கூட்டங்களே!
சிந்திக்க மாட்டீர்களா?

சில்லரைக் காசு வந்து
சிங்காரப் பொன்னுக்கு மாலையிடுமா?
சீதனப்பிணி சில மங்கையரை
சிதறடிக்கச் செய்யு மல்லவா?

சீதனப் பறவையின் சிறகுடைத்து
சுயநலத்தை கிள்ளி எறியும்போது
சிலர் நம்முடன் சீற்றம் கொண்டு
சிக்கல்களும் ஏற்படுத்த லாமல்லவா?

சிந்தியுங்கள் அன்புச் சிங்கங்களே!
சீதனத்தை ஒழிப்போம் தங்கங்களே!
சிறிய வாழ்வு வாழ்வோம் நித்தம்
சித்தம் மலர மனம் மகிழ்ந்திடவே

நன்றி: 'தினகரன்' வார மஞ்சரி
14-07-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயக்க வரும் மாது

மாதுவின் சிரிப்பு முல்லை
மதுவுக்கு சிரிப்பு இல்லை
மதுவும் மாதுவும் ஒரு சாதி
மயக்கம் தருவதில் சரி பாதி

மதுவில் மோகம் வைத்தால்
மனை தன் அன்பு நீங்கும்
மானம் பெரிதெனக் கொண்டு
மனதிற்கு போடு அணை

மதுவால் வருவது தீமை
மனைவி தருவது இனிமை
மதுவிலும் சிறந்த இன்பம்
மனைவியின் அன்பு ஸ்பரிஸம்

மாதுவின் போதை
மாறாத பாதை
மதுவின் போதை
மடையர்கள் பாதை

மதுவுக்கு விலை உண்டு
மனையாள் அன்புக்கோ விலை ஏது
மதுவில் மயங்கும் மனிதர்களே
மதியை வாங்க விலையுண்டா?

மதுவால் வரும் தருணம்
மயங்கினால் வரும் கரணம்
மனைவியே நீ ஒரு மங்கை
மயக்கம் தரும் கங்கை

நன்றி: 'தினகரன்' வார மஞ்சரி
23-06-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையாள் மாறலாமா?

தூய அன்பால்
துயரங்கள் போக்க
துணைவி இல்லா வாழ்வு
துடுப்பில்லா ஓடம்

வார்த்தைகளின் அன்பு
சோர்வுகளைக் களைய
நேர்த்தியான முகம்
பார்ப்பதற்கு இதம்

பாச வெள்ளத்தில் தத்தளிக்க
பருவ சுகம் தித்திக்க
பணிவிடைகள் பரிமாறி
பார்போற்றச் செய்பவளே

கனிவான பார்வைகள்
கல கல சிரிப்புக்கள்
களிப்பூட்டும் பேச்சுக்கள்
காதோடு சொல்பவளே

கலை மாறலாம் உலகில்
அலை மாறலாம் கடலில்
விலை மாறலாம் கடையில்
மனையாள் மாறலாமா?

நன்றி : 'தினகரன்' வார மஞ்சரி
17-11-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலை மொழி கேட்கலாமா?

வாழ்க்கை எனும் ஓடம்
வலம் வரும் நேரம்
வசந்தங்கள் தொல்லை
வாரிசுகளும் இல்லை

குழந்தைச் செல்வம் இல்லையா?
குடும்பத்தின் இன்பம் கொள்ளையா?
இறைவா அருள் தரவில்லையா?
நிறைவான வாழ்வு தொல்லையா?

தாலாட்டுக் கேட்கவில்லை
தவிக்கின்றது நெஞ்சம்
துயர் நீங்க வழியின்றி
துடிக்கின்றது உள்ளம்

குறு குறு நடை காணலாமா?
மழலை மொழி கேட்கலாமா?
குழந்தைச் செல்வம் வருமா?
குடும்பத்திற்கு ஒளி தருமா?

அகிலத்தில் புகழ் வந்தென்ன லாபம்
ஆயிரம் சுகம் இருந்தென்ன லாபம்
ஆயிரம் பொன் சேர்ந்தாலும்
அழகிய குழந்தைக்கு ஈடாகுமா?

நன்றி; 'தினகரன்' வார மஞ்சரி
10-11-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக மழை

இறைவன் கொடுத்த சோகம்
மறைவான ஒரு மேகம்
சோக மழை பொழிந்தது
சொல்ல வார்த்தைகள் இல்லை

சொத்துக்களும் கொள்ளை
சொந்தங்களும் இல்லை
சோதனைக் கடல் கொந்தளிக்க
சோகமடைய நேரிட்டது

கடனால் வருவது தொல்லை
கஷ்டங்களுக்கோ இல்லை ஒரு எல்லை
கடல் அலை போல் வரும்
கவலைகள் ஓடிப் போகாதா

வீடு வளவு இழந்து
வில்லங்கப் பட்டு
விதிவழி சென்று
விழிக்கிறோம் இன்று

துன்ப மழை பெய்தது
தூய கண்ணீர் ஆறானது
தூண்டில் போட சிலர்
துணிந்தனர் தினம்

துயர் மழை பெய்தென்ன லாபம்
தீராத சோகம் இருந்தென்ன லாபம்
மாறாத சோகம் மறைய வேண்டும்
மாநிலம் அழகாய் மலரவேண்டும்

நன்றி; 'தினகரன்' வார மஞ்சரி
21-07-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினி மலர்கள்

பாட்டாளி தோட்டத்தின்
பட்டினி மலர்கள்
வறுமை வெள்ளம் பாயும்போது
பொறுமை அணை தேடுகின்றன

இன்பம் எட்டாத கனி
துன்பம் வற்றாத பணி
மாறாத வீழ்ச்சி மீளுமா?
மறு மலர்ச்சி வருமா?

திசை மாறிய பறவைகளின்
ஆசை மனதில் பல ஓசைகள்
அசையாத மனதோடு
இசைப்ப தெல்லாம் சோககீதங்கள்

பந்து போல் அடிபட்டு
வெந்த உள்ளத்தால்
சிந்துகின்ற கண்ணீரை
சொல்ல வார்த்தைகள் இல்லை

வாச மலர்களே நீங்கள்
நேசக்கரம் தாருங்கள்
பட்டினி மலர்களைப் பார்த்து
பசிதீர்க்க முன்வாருங்கள்

நன்றி: 'தினகரன்' வார மஞ்சரி
27-10-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே நீ வருவாயா?

அன்பைக் கொடுத்து
ஆசைகள் வளர்த்து
அல்லல் படும்போது
அன்பே நீ வருவாயா?

அயராது உழைத்து
அழகிய வீடமைத்து
அல்லல் படும்போது
அன்பே நீ வருவாயா?

அந்தி மாலையில்
அழகுச் சோலையில்
அல்லல் படும் போது
அன்பே நீ வருவாயா?

ஆசைக் கனவில்
ஆனந்த நினைவில்
அல்லல் படும்போது
அன்பே நீ வருவாயா?

அன்பு நினைவுகளை
அனுதினம் வளர்த்து
அல்லல் படும்போது
அன்பே நீ வருவாயா?

அமுதைப் பொழியும்
அன்பு நினைவால்
அல்லல் படும்போது
அன்பே நீ வருவாயா?

நன்றி : 'தினகரன்' வார மஞ்சரி
30-06-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வம் சேருமா?

நிறைவான நெஞ்சத்தில்
குறையாதது செல்வம்
செல்வ நதியின்
சேமிப்பு அணை எங்கே?

செல்வக் காற்று வீச
சோக மழை குன்றி
சொந்த வாழ்வில்
சொகுசு வரும்

உலகம் மதிக்க
உழைப்பு வேண்டும்
உழைப்பால் செல்வம் சேரும்
ஊதாரியானால் மாறும்

ஊதாரியின் செல்வம்
உப்பாகக் கரையும்
ஊற்றெடுக்கச் செய்யின்
உலகமே உவக்கும்

பூ உலகினில் செல்வம்
புகழ் மழை மேகம்
செல்வம் அற்றவன்
செத்தவனாவான்

செல்வோம் செல்வோம் – என்று
சொல்கின்றது செல்வம்
செல்வதைத் தடுக்க
சேமிக்க வேண்டும்

நன்றி: 'தினகரன்' வார மஞ்சரி
22-09-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரிய வாழ்வு

உழைப்போம் உயர்வாய் வாழவே
உயரிய குடும்பம் மலரவே
உண்மைகள் என்றும் நிலைக்கவே
உன்னத எண்ணங்கள் வாழ்கவே

உதய சூரியன் உதிக்குமுன்
உழைக்க நாம் புறப்படுவோம்
உங்கள் திறமைகள் மலரட்டும்
உயரிய வாழ்வு தளிரட்டும்

ஊதாரித்தனத்தை விட்டொழித்து
ஊதியத்தை ஊற்றெடுக்கச் செய்வோம்
உயர்வான சேவை நாட்டுக்கு
உடனடியாகத் தேவை

உழவு பார்த்து நீங்கள்
ஊழல்கள் செய்தால்
உயர்ச்சிகளெல்லாம்
ஊமைக் கனவாகலாம்

உரமிட்டு வளர்த்த பயிரையே
உண்ணலாமா வேலி!
உழைப்பும் நாடும்
உடலும் உயிரும் போலல்லவா?

உயர்வான செயல்கள் தோன்ற
உன்னதமான எண்ணங்கள் தேவை
உழைப்பால் உயர்வடைய
உயரிய நாயன் துணை வரவேண்டும்

நன்றி: 'பாவளம்' – இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
17-07-1991

நிகழ்ச்சி தயாரிப்பு; பல்கலை வேந்தன் சில்லையூர் செல்வராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கு ஓர் அன்னை

ஆருயிர் என்றே அழைத்தவளே!
அன்புக்கு இலக்கணம் வகுத்தவளே!
அன்புக்கு ஓர் அன்னையே!
அகிலம் போற்றும் உன்னையே!

அன்னையர்கள் அனைவரும்
அகில மக்களின் அருட்கொடைகள்
அன்னையின் எண்ணங்கள்
அருள் மழை மேகங்கள்!

அன்னையின் அன்பு
ஆலம் விழுதுகள் போல்
அணைத்து நின்று
அமைதி தரும்!

அமைதி குலைந்து
அல்லல் படும்போது
அன்பான வார்த்தைகள் கொண்டு
ஆறுதல் சொல்வாயே!

அங்கச் சிதைவுகள் ஏற்படாமல்
அல்லல் பட்டு வளர்த்தாயே
அற்பமான சுகவீனத்திற்கும்
அதிர்ந்து விடுவாயே!

அன்னையின் மனதைப் புண்படுத்தினால்
அகிலத்திலேயே கிடைக்கலாம் தண்டனை
அலை பாயும் கவலை உள்ளங்களுக்கு
அணை போடும் அன்னையே!

நன்றி; 'தினகரன்' வார மஞ்சரி
26-05-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் வரவேண்டும் ஒற்றுமை

உள்ளத்தில் பயிர்செய்
உயர்வான தளிர் கொய்
உரம் என்ன புரியுமா?
உயரிய எண்ணம் தெரியுமா?

சுவை இல்லாத இனியா?
சுடர் இல்லாத நெருப்பா?
சுருதி இல்லாத சங்கீதமா?
சுகம் இல்லாத வாழ்வா

தாகம் தீரத் தான் தண்ணீர்
கவலை தீரத்தான் கண்ணீர்
ஆசை தீர்க்கவா சொன்னீர்
பாஷை புரியத்தான் சொல்வீர்

இருக்கும் போது மதிப்பில்லை
இல்லாத போது மதிப்பு
மனிதன் மாண்டதும் புகழ்
புனிதன் இருக்கும் போது இகழ்

வாழ்வில் எமக்கு
வர வேண்டும் ஒற்றுமை
தாழ்வில் ஒரு போதும்
வர வேண்டாம் வேற்றுமை

நன்றி: 'தினகரன்' வார மஞ்சரி
14-04-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி வரும்

அகங்காரத்துடன் கோடி
ஆசைகளும் கூடி
அழிவுப்பாதை செல்லின்
அமைதி கெடும்

அழகிய மொழி தவிர்த்து
ஆணவம் பேசி
அலைந்து திரியும் போது
அமைதி கெடும்

அன்னதானம் வழங்காது
அயலவரையும் வறியவரையும்
ஆதரிக்காமல் விடும் போது
அமைதி கெடும்

அன்னை தந்தையரை
அரவணைக்காமல் விட்டு
ஆறறிவை மறக்கும் போது
அமைதி கெடும்

அறம் செய்ய மறந்து
அடுத்தவன் மீது பொறாமை
அடையும் போது
அமைதி கெடும்

அல்லல் படும் மனிதர்களே
அயர வேண்டாம்
ஆண்டவன் ஆசியுடன்
அமைதி வரும்

நன்றி: 'தினகரன்' வார மஞ்சரி
16-06-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைகள்

அன்றாட வாழ்க்கையில்
அளவு கடந்த பிரச்சினைகள்
அடிக்கடி தோன்றுவதற்குக் காரணம்
ஆசையல்லவா?

ஆயிரம் தவறுகள்
அகிலத்தில் நிகழ்கின்றன
அதற்கெல்லாம் காரணம்
ஆசையல்லவா?

அன்பு மனைவியை விட்டு
ஆசை நாயகியைத் தேடி
அலைவதற்கெல்லாம் காரணம்
ஆசையல்லவா?

அளவில்லாத சொத்துக்கள் இருந்தும்
அடுத்தவன் சொத்தை
அபகரிப்பதற் கெல்லாம் காரணம்
ஆசையல்லவா?

அற்ப இன்பங்கள் அனுபவிக்க எண்ணி
அடிக்கடி மதுபானம்
அருந்துவதற்குக் காரணம்
ஆசையல்லவா?

நன்றி: 'பாவளம்' - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
10-07-1991

நிகழ்ச்சி தயாரிப்பு: பல்கலை வேந்தன் - சில்லையூர் செல்வராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறு

தன்னம்பிக்கை இழந்து
தற்பெருமை கொண்டு
தடம் மாறும் போது
தவறு வரும்

தவிர்க்க வேண்டியதை தவிர்க்காது
தாண்டக் கூடாததை
தாண்டும் போது
தவறு வரும்

தாய் தந்தை சொல் கேளாது
தன் மனம் சொன்னபடி
தாண்டவம் ஆடும்போது
தவறு வரும்

தற்காலிக கோபங்களை
தவிர்த்து விடாமல்
தடுமாறும் போது
தவறு வரும்

தருணங்களைச் சந்திக்க
திட்டமிட்டுச் செயல்படாது
தன் சுயபுத்தியை இழக்கும் போது
தவறு வரும்

நன்றி : 'பாவளம்' – இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
24-07-1991

நிகழ்ச்சி தயாரிப்பு ; பல்கலைவேந்தன் சில்லையூர் செல்வராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூதாட்டம் ஆடினால் சுகம் வருமா?

சிறுவர்கள் சிந்திக்காது
சில்லறையோடு
சூதாட்டம் ஆடினால்
சுகம் வருமா?

சுயமாக உழைத்து
சுகத்துடன் வாழாது
சூதாட்டம் ஆடினால்
சுகம் வருமா?

சுப வாழ்வில்
சுய நலத்தோடு
சூதாட்டம் ஆடினால்
சுகம் வருமா?

சிறப்பான வாழ்வை
சிந்திக்காது
சூதாட்டம் ஆடினால்
சுகம் வருமா?

சீரான வழியில்
சிறகடிக்காது
சூதாட்டம் ஆடினால்
சுகம் வருமா?

செல்வந்தர்கள்
சேமித்த செல்வங்களால்
சூதாட்டம் ஆடினால்
சுகம் வருமா?

நன்றி: 'தினகரன்' வார மஞ்சரி
28-07-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

கல்வியின் ஒளிகள்
காட்டும் சில வழிகள்
சுமம் செய்து நாங்கள்
கல்விப் பயிர் வளர்ப்போம்

கடல் அலைபோல்
கஷ்டங்கள் வரினும்
கல்வி எனும் ஓடத்தால்
கரை சேர்ந்திடுவோம்

காணிக்கு எல்லை உண்டு
கல்விக்கு எல்லை இல்லை
கடலுக்குக் கரை உண்டு
கல்விக்குக் கரை இல்லை

கள்ளம் இல்லா மனிதர்களே
கல்வி கற்பது கடமை
கற்காமல் இருப்பது
கண்டிப்பாக மடமை

கல்விக் கடல் கடந்து
கரை சேர்ந்த அறிஞர்களின்
கனிவான பொன் மொழிகளை
கண்டிப்பாகக் கடைப்பிடிப்போம்

நன்றி : 'தினகரன்' வார மஞ்சரி
09-06-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையோரக் காற்று

கூடைக் கொழுந்துகளை
மூடைக் கணக்கில்
சேகரித்த பின்பும்
வேகமில்லா வாழ்வு ஏன்?

தாழ்மையின் தாண்டவம்
ஏழ்மையின் வாட்டம்
சூழ்ந்துள்ள தொல்லைகளில்
சுகம் கானல் நீரா?

வாட்டிடும் வறுமை
வருந்திடும் துயரம்
தொல்லை யான வாழ்வுக்கு
இல்லையா ஒரு விடிவு?

வறுமைக் கட்டிடம்
வானத்தை தொடுகின்றது
துயரத் தூண்களை
துண்டிப்பதெப்போது?

தொலைவில் வீசும்
மலையோரக் காற்றே
மாசற்ற உள்ளங்களுக்கு
மகிழ்ச்சி மழை கொண்டுவா!

நன்றி: 'தினகரன்' வார மஞ்சரி
24-11-1991


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரக் கொழுந்துகள்

மலை நாட்டில் வசிப்பது
மனிதன் என்பதை
மக்கள் உணரும் காலம்
மங்கி விட்டது

மணித்தியாலக் கணக்கில்
மலையேறிய மங்கைகள்
மாறாத வேகத்தில்
மன்றாடிச் சேர்ப்பதெல்லாம் துயரக் கொழுந்துகள்

மங்கிய இருள் நீங்குமா?
மறுமலர்ச்சி வருமா? — என்று
மீளாத் துயர் நீங்க
மன்றாடிய வார்த்தைகள் எத்தனை?

மலை நாட்டில் மாபெரும் மேட்டில்
மண் வெட்டியோடு சில மனிதர்கள்
மாதம் முடியவில்லை
மிஞ்சிவிட்டது கடன் தொல்லை

மிருகம் அல்ல நாம் மனிதர்கள்
மிதிபலகையில் செல்லும் பிரயாணிகளைப் போல்
மிதிபட்டு விட்டதினால்
முன்னேற முடியவில்லையே!

மலை நாடுகளில் மாறாத இன்பம்
மங்காமல் இருக்க
முயற்சிகள் எடுத்து நாம்
முன்னேற்றங்கள் காண்போம்

நன்றி : 'பாவளம்' – இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
31-07-1991

நிகழ்ச்சி தயாரிப்பு : பல்கலை வேந்தன் சில்லையூர் செல்வராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்த சீற்றம்?

இயற்கை அன்னையின் சீற்றம்
இறந்தவர்கள் இரண்டு லட்சம் பேர்
இதோ ஒரு பரிதாப சம்பவம்
இன்று கண்ணீரில் குளிக்கிறது — பங்களாதேஷ்

இன்னல்களோ பலகோடி
இல்லம் இழந்தோர் ஒரு கோடி
இராணுவ விமானங்களும் சேதம்
இழுவைப் படகுகளும் மோசம்

இயற்கையே ஏன் இந்த சீற்றம்?
இதற்கு இல்லையா ஒரு மாற்றம்?
இது உன் கோபமா?
இல்லை சாபமா?

இயற்கை அன்னையே சொல்
ஈரம் இல்லையா உன் நெஞ்சில்?
இது உன் சோதனையா?
இல்லை சாதனையா?

இலங்கையில் வாழும் நாம்
இயன்ற வரை கோருவோம்
இது போன்ற அழிவு — பங்களா தேஷுக்கு
இனி வர வேண்டாம்

நன்றி ; 'தினகரன்' வார மஞ்சரி
19-05-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் செயல்

இரவு பகலாகி
இயற்கை சுழல்கின்றது
இவை அனைத்தும்
இறைவன் செயல்

காலங்கள் மாறி
காற்று வீசுகின்றது
இவை அனைத்தும்
இறைவன் செயல்

பருவ மழை பெய்ய
பயிர்கள் வளர்கின்றன
இவை அனைத்தும்
இறைவன் செயல்

அகண்ட வானத்தில்
அழகிய நட்சத்திரங்கள்
இவை அனைத்தும்
இறைவன் செயல்

சொந்தங்களோடு மனிதன்
சோதிக்கப்படுகின்றான்
இவை அனைத்தும்
இறைவன் செயல்

வேகமான சூறாவளிகள்
வெள்ளத்தால் அழிவுகள்
இவை அனைத்தும்
இறைவன் செயல்

நன்றி; 'தினகரன்' வார மஞ்சரி
08-09-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துயரக் கொழுந்துகள்

கவிஞர்
மடவளை கலீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த ___ மடவளை கலீல்

# மடவளை கலீல்...



மத்திய மலையகத்தின் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த மடவளை என்னும் முஸ்லிம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கவிஞர் மடவளை கலீல் ஆவார்.

எழுத்துத் துறையை ஏறிட்டும் பார்க்க விரும்பாத ஒரு போலிஸ் உத்தியோகத்தராக வாழ்வைத் துவங்கியுள்ள கவிஞர் கலீல், சமீபத்தில் தான் திருமணஞ் செய்து கொண்டார். திருமணத்தின் பின் தன் முன்னால் நிகழும் சம்பவங்கள் குறித்து, மனைவி நல்லாளுடன் கருத்துப் பரிமாற்றஞ் செய்தபோது, எண்ணங்கள் கவித்துவ உணர்வுடன் வெளிப்படவே, அவற்றை தாளிலே எழுத்தாக்கி சேமிக்கலானார்,

இந்த 'சேமிப்பு' ஒரு முறை பிரபல இலக்கியவாதி ஒருவரால் படிக்க நேரிட்டபோது, ''மிஸ்டர் கலீல்... உங்களுக்கு கவிதா உள்ளம் இருப்பதை உங்களது சேமிப்புகள் சேதியாக சொல்கின்றன, நீங்கள் முயற்சித்தால் கவிஞராக வரலாம்'' என அவர் உற்சாகமூட்டியுள்ளார்.

இந்த உற்சாக டானிக்கே கலீலை எழுது கோலை ஏந்தச் செய்தது. தொழில் ரீதியாகப் பலரை சந்திக்க நேர்கையில், இவர் பல்வேறு உணர்வுகளுக்கு கைதியானார். அவற்றை எழுத்தாக்கி தேசிய நாளிதழ் ஒன்றுக்கு அச்சுவாகனம் ஏற்றி சமுதாயத் தெருக்களில் உலா வர அனுப்பி வைத்தார், நாளிதழ் நம் கலீலுக்குப் பச்சை விளக்கை காட்டியது.

அன்று துவங்கிய எழுத்துப் பயணம் இந்த முதல் நூலெனும் மைல் கல்லைத் தாண்டி தொடர்கிறது. சமுதாயத்தின் ஒரு பொன் விடியலை நோக்கிப் பயணஞ் செய்யும் இலக்கிய பயணியே இந்தக் கவிஞர் மடவளை கலீல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org